ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2268/14 - 2022 පෙබරවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2022.02.22
*2268/14 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**பத்தேகம பிரதேச சபை**

களியாட்ட வரி விதித்தல்

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச சபையில் 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 5.19 இன்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் தீர்மானம் 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மாகாண சபைச் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சொல்லப்படுகின்ற களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தென் மாகாணத்தின் ஆளுநர் விலியம் விஜேசிங்க கமகே ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் தயவாக அறியத்தருகின்றேன்.*

**விலியம் விஜேசிங்க கமகே,**
ஆளுநர்,
தென் மாகாணம்.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
காலி,
2021, திசெம்பர் 31.

1A - PG 5755 — 13 (2022/02)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தீர்மானம்**

*(267 ஆம் அத்தியாயம்) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி பத்தேகம பிரதேச சபை, சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள பிரதேசத்தில் நடாத்தப்படும் அதன், கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் கேளிக்கைச் செயல்களுக்காக செலுத்தப்படும் கொடுப்பனவில் நூற்றுக்கு பத்து (10%) வரியாக விதித்து அறவிடுவதற்கும் இந்த தீர்மானம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து செயல்வலுப்பெற வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதாவது, மேல்விதிக்கப்பட்ட களியாட்ட வரி, அதன் களியாட்டச் செயல்கள் நடாத்தப்படும் திகதிக்கு முன் தொடர்புடைய அமைப்பு அல்லது அமைப்பாளரால் உகந்த முறையில் பத்தேக பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும் என்று பத்தேகம பிரதேச சபை தீர்மானித்துள்ளது.*

EOG 02-0572

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.